தமிழ்நாட்டின் எண்ணற்ற சாலைகளும், ஏராளமான பாலங்களும் நம் அரசின் சாதனைகளைப் பறைசாற்றுகின்றன! இந்தியாவில்

தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி மாநிலமாகத் திகழ்ந்திட அர்ப்பணிப்போடு செயல்படுவீர்!

சாலை - பாலப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் - அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை!

சென்னை, ஜூலை 5 -

சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம், தமிழ்நாட்டில் சாலை மற்றும் பாலப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "தமிழ்நாட்டில் எண்ணற்ற சாலைகளும் பாலங்களும் நம் அரசின் சாதனையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன" என்றும், "தமிழ்நாடு, இந்தியாவில் முன்னணி மாநிலமாகத் தொடர்ந்து திகழ்வதற்கு அதிகாரிகள் அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட வேண்டும்" என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.7.2023) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற, தமிழ்நாட்டில் சாலை மற்றும் பாலப் பணிகள் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:

தமிழ்நாட்டில் தற்போது நடைபெற்று வரும் சாலை மற்றும் பாலப் பணிகள் முன்னேற்றம் குறித்த இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, அரிய கருத்துகளை எடுத்து வைத்திருக்கக்கூடிய உங்களுக்கு முதலில் என்னுடைய நன்றியை, வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலை மற்றும் பாலப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக கலந்து விவாதிக்கப் பட்டிருக்கிறது. துறையினுடைய செயலாளர்கள் தங்களது துறைகளின் மூலம் செயல்படுத்தப் பட்டு வரக்கூடிய திட்டங்கள், அதனுடைய தற்போதைய நிலை மற்றும் முன்னேற்றம் குறித்து நீங்களும் விளக்கியிருக்கிறீர்கள்.

ஈராண்டில் முத்திரை பதிக்கும் பல்வேறு சாதனைகள்!

நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பியான முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களது அடியொற்றிச் செயல்பட்டு வரக்கூடிய நம்முடைய அரசு, மக்கள் நலனை மட்டுமே முன்னிறுத்தி, கடந்த ஈராண்டில் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களில் முத்திரை பதிக்கக்கூடிய வகையில் சாதனைகள் பல படைத்து வருகிறது என்றால் அது மிகையாகாது.

நமது அரசு பொறுப்பேற்றது முதல், அனைத்துத் துறைகளிலும் பல புதிய திட்டங்களை, மாநிலத்தினுடைய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, அவற்றை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறது. அப்படி அறிவிக்கப் படக்கூடிய திட்டங்களின் செயல்பாடுகளை பல்வேறு காலக்கட்டங்களில், துறை ரீதியான ஆய்வுக் கூட்டங்கள், முத்திரைத் திட்டங்கள், மாவட்ட ஆய்வுக் கூட்டங்கள் என பல்வேறு தலைப்புகளில் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறோம். தொடர்ச்சியான ஆய்வுகளே, தொய்வில்லாத நிர்வாகத்தை உருவாக்கும் என்பதன் அடிப்படையில்தான் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

நமது அரசு தொழிற்சாலைகளுக்கான உள்கட்டமைப்பில் அதிகக் கவனம் செலுத்தி வருவதால், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

பருவ மழைக்கு முன்பு - நிலுவையில் உள்ள சாலை மற்றும் பாலப் பணிகளை விரைந்து முடித்திடுக!

தொழிற்சாலைகளுக்கு உகந்த சூழ்நிலைகளான இடம் கையகப்படுத்தல், போக்குவரத்து வசதி, ஏற்றுமதிக்கான வசதிகள், உள்கட்டமைப்புகள் உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு சவால்களை நாம் எதிர்கொண்டாலும், அத்தகைய சவால்களில் தீவிர கவனம் செலுத்தி, பிரச்சினைகளுக்கு இடம் தராமல், உலகளாவிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில்கள் தொடங்கவும், அதற்காக தொழில் முதலீடுகளைப் பெறவும் நாம் முழு அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட்டு வருகிறோம்.

அந்த அடிப்படையில்தான், தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக தொழில் முதலீடுகள் குவிந்த வண்ணம் உள்ளன. ஏற்கனவே,

5 பில்லியன் டாலர் அளவிற்கு தொழில் முதலீடுகளுக்கு உத்தரவாதம் தரப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தொழில் துறையில் எதிர்பார்த்த முதலீட்டை வெகு விரைவில் அடைந்துவிடும் என்று நாளேடுகள் தலையங்கம் தீட்டிக் கொண்டிருப்பதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். இவை அனைத்தும் உங்களது ஒத்துழைப்போடுதான் சாத்தியமாகிக் கொண்டிருக்கிறது. அதற்காக முதலில் நான் உங்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநில நலனுக்கு, ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சாலைகளும், பாலங்களும் தவிர்க்க இயலாத முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன என்றால் அது மிகையல்ல.

சீரான சாலைகளும், பாலங்களும் பயணங்களுக்கு மட்டுமல்ல. ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அது அடிப்படையான தேவை. இதனைக் கருத்தில் கொண்டு தான், கடந்த 10.5.2023 அன்று நடைபெற்ற கூட்டத்தில், தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் அனைத்து சாலை மற்றும் பாலப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக உங்களுடன் கலந்தாய்வுக் கூட்டத்தை நடத்தினோம். அதன் விளைவாக பல பணிகளில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. அது ஓரளவிற்கு மனநிறைவை அளிக்கிறது. இருப்பினும் குறிப்பிட்ட சில இடங்களில் தொடர்ந்து தொய்வினையும் காண முடிகிறது.

உரிய காலத்திற்குள் பணிகளை முடித்திடுவீர்!

பொதுவாக, சாலைப் பணிகளும், பாலப் பணிகளும் நடைபெறும் காலங்களில் அப்பகுதிகளில் போக்குவரத்து உள்ளிட்ட பல சிரமங்களை பொது மக்கள் சந்திக்க நேரிடும் என்பதை நான் சொல்லிதான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. அத்தகைய தற்காலிகச் சிரமங்கள், நிரந்தர வசதிக்காகத்தான் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

இருப்பினும், சாலை மற்றும் பாலப் பணிகளை மேற்கொள்ளும்போது, தேவையற்ற தாமதங்கள் ஏற்பட்டால், மக்கள் மேலும் சிரமத்திற்கு ஆளாகக்கூடும்; அதனால், நமது அரசுக்கு அவப்பெயர் ஏற்படக்கூடும் என்பதைக் கருத்திலே கொண்டு, உரிய காலத்திற்குள் பணிகளை முடித்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் இன்று ஆய்வு செய்த பணிகளுக்கெல்லாம் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே பணிகளை முடிப்பதற்கு நிதி ஒரு தடையாக இல்லை என்பதை அறியும்போது மகிழ்ச்சி அளிக்கிறது. தாமதத்திற்கு பொதுவான காரணம், நில எடுப்பு மற்றும் துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பில் ஏற்படும் பிரச்சனைகள்தான் என்பதைத் தெளிவாக உணர முடிகிறது. இத்தகைய பிரச்சனைகளுக்கு உடனடித் தீர்வு காணும் வகையில், தலைமைச் செயலாளர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக தொழில் முதலீடுகள் குவிந்த வண்ணம் உள்ளன. ஏற்கனவே, 5 பில்லியன் டாலர் அளவிற்கு தொழில் முதலீடுகளுக்கு உத்தரவாதம் தரப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தொழில் துறையில் எதிர்பார்த்த முதலீட்டை வெகு விரைவில் அடைந்துவிடும் என்று நாளேடுகள் தலையங்கம் தீட்டிக் கொண்டிருப்பதை நீங்கள் எல்லாம் நன்கு அறிவீர்கள். இவை அனைத்தும் உங்களது ஒத்துழைப்போடுதான் சாத்தியமாகிக் கொண்டிருக்கிறது. அதற்காக முதலில் நான் உங்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கைப் பேரிடர்களை தாங்கும் அளவிற்கு கட்டமைப்பு!

நமது அரசு பொறுப்பேற்றபோது, குறிப்பாக சென்னையில் வடகிழக்கு பருவ மழையின்போது ஏற்பட்ட பாதிப்புகளை நீங்கள் அனைவரும் நன்றாக அறிவீர்கள். அதனைத் தொடர்ந்து, இந்த அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக, இன்றைக்கு சென்னை சாலைகள் எத்தகைய இயற்கைப் பேரிடர்களையும் தாங்கக்கூடிய அளவிற்கு, கட்டமைப்புப் பெற்றதாக மாறியுள்ளதை மக்கள் இன்றைக்கும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய வெற்றிக்கு, சாதனைக்கு அடிப்படைக் காரணம் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பும், தொடர்ச்சியான ஆய்வுகளும்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த அடிப்படையில்தான் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பணிகளை முடித்து - மக்களின் இன்னல்கள் போக்கிடுவீர்!

இந்த ஆண்டு வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக, நிலுவையில் உள்ள சாலை மற்றும் பாலப் பணிகளை முடித்து, மக்களின் இன்னல்களைப் போக்கிட வேண்டுமென்று நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

எனவே, ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையில், விரைந்து செயல்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட காலக்கட்டத்திற்குள் அனைத்துப் பணிகளையும் விரைவில் முடிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். மேலும், விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பில் உள்ள பாலங்கள் மற்றும் புறவழிச்சாலைப் பணிகளை விரைந்து செயல்பாட்டிற்குக் கொண்டு வரும் வகையில் திட்டமிடுமாறும், அதற்கேற்பக் செயல்படுமாறும் உங்கள் அனைவரையும் நான் மீண்டும், மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

இதற்குத் தேவைப்படும் நில எடுப்புப் பணிகளை சம்பந்தப்பட்ட துறைகளோடு வருவாய்த் துறையும் இணைந்து பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

50 ஆண்டுகளைக் கடந்து நிற்கும் 'அண்ணா மேம்பாலம்'!

இந்த இனிய வேளையில், 50 ஆண்டுகள் கடந்து நிற்கும் சென்னை அண்ணா மேம்பாலத்தினை நினைவுகூர்ந்து மகிழ்கிறேன். சென்னை மாநகருக்கு அழகுசேர்க்கும் அண்ணா மேம்பாலத்தினை 1973 ஜூலை 1ஆம் நாளன்று, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் திறந்து வைத்தார்கள். அதற்கு 'அண்ணா மேம்பாலம்' என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். 50 ஆண்டுகளைக் கடந்தும், அதன் கட்டுறுதி குறையாமல் இன்றும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறது அந்த மேம்பாலம்.

கழக அரசில் எண்ணற்ற சாலைகள் - ஏராளமான பாலங்கள்!

அதேபோன்று, கத்திபாரா சந்திப்பு, பாடி சந்திப்பு, கோயம்பேடு சந்திப்பு ஆகிய இடங்களில் பாலங்கள் நமது அரசின் சாதனைக்கு எடுத்துக் காட்டாய் விளங்கிக் கொண்டிருக்கின்றன. கடந்த சனிக்கிழமையன்று கூட, சென்னை திரு.வி.க. நகர் பகுதியில், ஸ்டீபன்சன் சாலையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள செங்கை சிவம் பாலத்தினை நான் திறந்து வைத்தேன். சென்னையில் மட்டுமல்ல - தமிழ்நாட்டிலும் இதுபோன்று எண்ணற்ற சாலைகள், பாலங்கள், நம் அரசின் சாதனையை இன்றளவும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

இத்தகைய சாதனைகளை நமது அரசு தொடர்ந்து நிகழ்த்துவதற்கு, மக்கள் பணி ஆற்றுவதற்கு, தமிழ்நாடு, இந்தியாவில் முன்னணி மாநிலமாகத் தொடர்ந்து திகழ்வதற்கு நீங்கள் அனைவரும் அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட வேண்டும் - ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், கார்கூடல்பட்டி கணவாய்பட்டியில் கிணற்றில் தவறி விழுந்து இறந்த - காயமடைந்த 6 நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி முதலமைச்சரின் பொது நிவாரண நிதி ரூ. 9 லட்ச ரூபாய்க்கான காசோலையை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.பி.சின்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் ஆறுபாதி மேட்டிருப்பு திருஞானசம்பந்த வீதியில் அழகர், தனலட்சுமி ஆகியோர் வீடுகள் தீ விபத்தில் எரிந்து சேதம் அடைந்தது. இதையடுத்து மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் நேரில் சென்று ஆறுதல் கூறி கழகத்தின் சார்பில் நிதி உதவி மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் மாவட்டக் கழக துணைச் செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எம்.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் உள்ளனர்.

ஏ.விஜயகுமார் பங்கேற்பு

அயோத்தியாப் பட்டணம் ஒன்றியத்தில் பாலம் அமைக்கும் பணி!

ஒன்றியக் குழுத் தலைவர் ஹேமலதா விஜயகுமார் ஆய்வு!

சேலம், ஜூலை 5 -

சேலம் மாவட்டம் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட தென்னங்குடி பாளையம் ஊராட்சியில் அப்பகுதி கிராம மக்கள் பல ஆண்டுகளாக பாலம் கேட்டு கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து நரசிங்கபுரத்தில் இருந்து வசிஷ்ட நதியில் குறுக்கே தென்னங்குடி பாளையத்திற்கு புதிய பாலம் அமைக்க நபார்டு திட்டத்தின் கீழ் ரூ 3.69 கோடி மதிப்பில் பாலம் அமைக்கும் பணியினை ஆத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே.செழியன், ஒன்றிய குழு தலைவர் டாக்டர்.பத்மினி பிரியதர்ஷினி, மாவட்ட கவுன்சிலர் நல்லம்மாள் ஆகியோர் தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சியில் நரசிங்கபுரம் நகரச் செயலாளர் வேல்முருகன், நரசிங்கபுரம் நகர மன்ற தலைவர் அலெக்ஸ்சாண்டர், ஒன்றிய கவுன்சிலர் சேகர், கவுன்சிலர் பிரகாஷ், ஊராட்சி மன்ற தலைவர் பிச்சுமணி, துணை தலைவர் செல்வி ஸ்டாலின், வட்டார வளர்ச்சி ஆணையாளர் அசோகன், சுரேஷ், செல்வகுமார், ஞானம் சேகர், முருகேசன், ராமசாமி, செந்தில்குமார், வெங்கடேஷ், குணசேகரன், கணேசன், ராஜா, ஒன்றிய பொறியாளர் விஸ்வநாதன் மற்றும் நகர, ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாநகராட்சி
குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க. எண். இ1 / 1501 / 2023. நாள் : 28.06.2023.

ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அல்லது அவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டவரால் பொதுநிதி - 2023 - 24-ம் நிதியாண்டு கீழ் பழுதடைந்த சாலைகளை சீரமைக்கும் பணிகளுக்கு E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. இந்த பணிகளின் மொத்த மதிப்பீடு **ரூ.500.00 இலட்சங்கள்.** ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை **https://tntenders.gov.in** என்ற இணையதளத்தில் மட்டும் இலவசமாக எடுத்துக்கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களையும் **(E-Mail id: commr.erode@tn.gov.in Phone No.: 0424-2251616)** என்ற முகவரியில் பெறலாம்.

ஒப்பந்தப்புள்ளி நேரம் மற்றும் நாள்:

அ) ஒப்பந்தப்புள்ளி இறக்கம் செய்தல் : 03.07.2023 முதல் 12.07.2023 வரை (3.00 P.M.)
ஆ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 12.07.2023 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி திறத்தல் : **12.07.2023 மாலை 3.30 மணி**

ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின், அதற்கு அடுத்த வேலை நாளில், அதே நேரத்தில், அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும்.

செ.ம.தொ.இ/3367/ஒப்பந்தப்புள்ளி/2023 ஆணையாளர், ஈரோடு மாநகராட்சி.

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை

ம.நீ.வ.து.ந.க.எண்.பி1/3097/2023 **இரு உறை குறுகிய கால முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**

வ. எண்	பணியின் விவரம்	பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்)	முன் வைப்புத் தொகை	ஒப்பத்திற்கான தகுதியுள்ள வகுப்பு
1	மண்டலம் - 2ல் உள்ள மணலி ஏரியினை மேம்படுத்தி புனரமைக்கும் பணி	ரூ. 460.00	பணியின் அலுவலக மதிப்பில் 1%	வகுப்பு - 1

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் **20.07.2023 மாலை 3.00 மணி**
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் **https://tntenders.gov.in**
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் **21.07.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 3371 / ஒப்பந்தப்புள்ளி / 2023 கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை

ம.நீ.வ.து.ந.க.எண்.பி1/3098/2023 **இரு உறை குறுகிய கால முறையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**

வ. எண்	பணியின் விவரம்	பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்)	முன் வைப்புத் தொகை	ஒப்பத்திற்கான தகுதியுள்ள வகுப்பு
1	மண்டலம் - 3ல் உள்ள மாதவரம் பெரியதோப்பு ஏரியினை மேம்படுத்தி புனரமைக்கும் பணி	ரூ. 444.00	பணியின் அலுவலக மதிப்பில் 1%	வகுப்பு - 1

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் **20.07.2023 மாலை 3.00 மணி**
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் **https://tntenders.gov.in**
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் **21.07.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 3369 / ஒப்பந்தப்புள்ளி / 2023 கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/1572-3/2023 **இரு உறை குறுகிய கால முறையில் மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**

வ. எண்	கோப்பு எண் மற்றும் பணியின் விவரம்	பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்)	முன் வைப்புத் தொகை	ஒப்பத்திற்கான தகுதியுள்ள வகுப்பு
1	ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/1572-3/2023 மண்டலம் - 15, வார்டு-195 உள்ள பெரிய சத்திர குளம் மேம்படுத்தி புனரமைக்கும் அமைக்கும் பணி சிப்பம்-3	ரூ. 90.08	பணியின் அலுவலக மதிப்பில் 1%	வகுப்பு - 1

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் **13.07.2023 மாலை 3.00 மணி**
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் **https://tntenders.gov.in**
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் **14.07.2023 மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 3370 / ஒப்பந்தப்புள்ளி / 2023 கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்